**அபிவிருத்தி லொத்தர் சபை - 2024**

----------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து

வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும். துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல். வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்,
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நேரடி இயக்க செயற்பாடுகளினாலான காசுப்பாய்ச்சல் கணக்கிடலின் போது முதலீட்டு வட்டி வருமானம் வரி முன்னைய இலாபத்துடன் மீண்டும் சேர்க்கப்பட்டு ஆண்டினுள் உண்மையாக காசாகக் கிடைத்த வட்டி வருமானம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதும் 2024 ஆண்டில் முதலீட்டு வட்டி வருமானமாக ரூபா 177,922,791 அளவையும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் முதலீட்டு வட்டிக் காசு பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் ஆண்டினுள் உண்மையாக காசாகக் கிடைத்த முதலீட்டு வட்டி ரூபா 284,754,828 ஆகும். அதன் பிரகாரம் முதலீட்டி வட்டி காசுப் பெறுவனவு ரூபா 106,832,037 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காடடியுள்ள, காசாகக் கிடைத்த முதலீட்டு வட்டி வருமானக் கூட்டுத் தொகை எம்மால் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த ரூபா 106,832,037 தொகையானது 2024 ஆண்டினுள் காசாகக் கிடைத்த, 2023 ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் மற்றும் 2024 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்திற்கு இடையிலான வித்தியாசமாகும். இப் பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் செம்மையாக்கப்பட்டுள்ளது.<br><br>கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு முதலீட்டு வட்டி பெருவனவினுள் காண்பிக்கப்பட வேண்டிய இந்த ரூபா 106,832,037 ஆன காசுப்பாய்ச்சல், முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள போதும் முதலீட்டு செயற்பாடுகளினால் கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சலிற்கான தாக்கமொன்று அல்ல.<br><br>எவ்வாறாயினும் காணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு இவ்வாண்டு முதல் குறித்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. | காசாகக் கிடைத்த முதலீட்டு வட்டி காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆண்டினுள் முதலீட்டுத் தொகை காசு செளிப்பாய்ச்சல் மற்றும் முதலீட்டுத் தொகை காசு உட்பாச்சல் வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டினுள் முதிர்வடைந்த பின்னர் மீள்முதலீடு செய்யப்படாது பெறப்பட்டிருந்த காசு ரூபா 377,732,522 ஆன நிலையான இரண்டு வைப்புக்கள் மற்றும் மீளாய்வாண்டினுள் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்திருந்த ரூபா 9,791,292 ஆன காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப் பாய்ச்சல் காசுப் பாய்ச்சல் கூற்றில் பிரதிபலித்திருக்காததுடன் நிலையான வைப்புக்களிலிருந்து கிடைத்த தொகையாக ரூபா 474,773,267 காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலையான வைப்புக்களிலிருந்து கிடைத்த காசு ரூபா 106,832,037 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 106,832,037 தொகை மேலே விபரிக்கப்பட்டவாறு 2024 ஆண்டினுள் காசாகக் கிடைத்த, 2023 ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் மற்றும் 2024 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்திற்கு இடையிலான வித்தியாசமாகும்.<br><br>கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு முதலீட்டு வட்டி பெருவனவினுள் காண்பிக்கப்பட வேண்டிய இந்த ரூபா 106,832,037 ஆன காசுப்பாய்ச்சல், முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள போதும் முதலீட்டு செயற்பாடுகளினால் கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சலிற்கான தாக்கமொன்று அல்ல.<br><br>எவ்வாறாயினும் காணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு இவ்வாண்டு முதல் குறித்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் ஆண்டினுள் முதலீட்டுத் தொகை வெளிப்பாய்ச்சல் மற்றும் முதலீட்டுத் தொகை உட்பாய்ச்சல் வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 07 ஆம் பந்தி பிரகாரம் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் உருப்படி ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய பொருளாதார நலன் நிறுவனத்திற்கு உள்பாய்ச்சல் ஏற்படும் போது மற்றும் அதன் கிரயத்தை நம்பகரமான அளவீடு செய்ய முடியும் எனின் மாத்திரம் அதனை ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என இனங்காண வேண்டியிருந்த போதிலும் பொருளாதார நலன் நிறுவனத்தினுள் உட்பாய்ச்சல் ஏற்படுதல் என்ற நிபந்தனையை நிறைவேற்ற முடியாத பௌதீக ரீதியாக சபையிடம் காணப்படாத பெறுமதி ரூபா 8,095,000 தொகைக்கான கெப் வண்டி ஒன்று மற்றும் தற்போது பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ள ரூபா 7,641,159 தொகை பெறுமதியான 07 சீட்டிழுப்பு இயந்திரங்கள் மீளாய்வாண்டின் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 8,095,000 தொகையான டபள் கெப் வண்டி சபைக்கு சொந்தமாக பௌதீக ரீதியாக காணப்படவில்லை எனும் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். இந்த கெப் வண்டி தொடர்பாக தற்போது நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அது நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 7,641,119 தொகை பெறுமதியான 4 சீட்டிழுப்பு இயந்திரங்கள்,01 வாயு அமுத்தி இயந்திரம் மற்றும் சீட்டிழுப்புக்காக பயன்படுத்தப்படும் பந்துகள் உட்படுகின்றன. இந்த உருப்படிகள் சீட்டிழுப்பு கருமங்களுக்காக சபையினால் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட உருப்படிகளாவதுடன் இவை சபையின் சொத்துக்களாக குறிப்பு இடப்பட்டுள்ளன. அந்த உருப்படிகள் சீட்டிழுப்பு கருமங்களுக்காக பயன்படுத்தப்படும் விஷேட இயந்திரங்களாக காணப்படுவதினால் இந்த இயந்திரங்களை பராதீனம் செய்யும் போது சிக்கல் ஒன்று | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 07 ஆம் பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணப்படுகின்றது. இவற்றில் காணப்படும் விஷேடத்துவம் மற்றும் சிதைவடைந்த நிலைமையின் மீது இவற்றை வெளித் தரப்பினருக்கு பராதீனம் செய்வது கடினமாக உள்ளது. தற்போது இந்த இயந்திரங்களை பராதீனம் செய்யாததன் மீது இந்த இயந்திரங்கள் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பாக வைத்திருக்க முகாமைத்துவம் திட்டமிட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அபிவிருத்தி லொத்தர் சபையின் சாப்பாட்டு அறை, களஞ்சிய அறை மற்றும் எல்லை சுவர் திருத்த வேலைக்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,728,884 இற்கான செலவுகள் நடைமுறை வேலைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இப்பணி மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டு இறுதி அளவில் 07 வருடங்களுக்கு அதிக காலம் கடந்திருந்த போதிலும் தேவையான கணக்கீட்டு சீராக்கல்கள் மேற்கொள்ளாமல் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்களின் கீழ் நடைமுறை வேலை என தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் சாப்பாட்டு அறை, களஞ்சிய அறை மற்றும் எல்லை சுவர் திருத்துவது தொடர்பான வேலைகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை. சொத்து ஒன்று என இனங்காண்பதற்கு குறித்த சொத்து நலன் பெறும் மட்டத்திற்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அதன் காரணமாக 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படிகளை மூலதனமாக்கி பெறுமானத்தேய்வு கணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) ஓப்பீட்டு எண்ணக்கரு(Matching Concept) பிரகாரம் இலாபம் அல்லது நட்டம் கணிப்பிடும் போது வருமானத்திற்கு எதிராக அந்த வருமானத்தை உழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் பதிவழிக்கபட வேண்டிய போதும் அந்த எண்ணக்கருவிற்கு மாற்றமாக மீளாய்வாண்டில் 08 வகை லொத்தர்களிற்குரிய பரிசுச் செலவாக பணிப்பாளர் சபை தீர்மானித்த விகிதத்தின் மீது கணிப்பிடப்பட்ட பரிசுச் செலவான ரூபா 15,094,967,030 தொகை இனங்காணப்பட்டிருந்தது. எனினும் அந்த லொத்தர்களிற்குரியதாக வெற்றிபெற்ற பரிசுச் செலவு ரூபா 14,945,564,011 ஆனதில் மீளாய்வாண்டில் பரிசுச் செலவாகரூபா 149,403,019 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் | 1997 இன் 20 இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 18 (3) பிரிவின் பிரகாரம் ‘‘பரிசுத் தொகை ஒன்றை ஏதேனும் ஒரு நபர் வெற்றி பெறாத சந்தர்ப்பத்தில் அந்த பரிசுத் தொகை ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டும்’’ எனக் குறிப்பிடப்படுகின்றது. சட்டத்தின் இந்த பிரிவிற்கு இணக்குவதற்காக முன்கூட்டிய அங்கீகார பரிசு விகிதம் பிரகாரம் பரிசு அளவு வருமான விகித்தினுள் செலவாக இனங்கண்டு, உள்ளவாறான பரிசு செலவு மற்றும் அந்த அங்கீகார பரிசு செலவிற்கு இடையிலான வித்தியாசம் பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 1997 இன் 20 இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்திற்கு இணங்க எம்மால் நடவடிக்கை | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருக்களிற்கு இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கையில் இலக்கம் 3.3.3 ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம் கணக்கீட்டு ஒப்பீட்டு எண்ணக்கரு வேண்டுமென்றே புறக்கணிக்கப்படவில்லை என்பதுடன் அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்குவதற்காக மேலே கணக்கீட்டு முறைமை நீண்ட காலமாக கணக்கீட்டு நடைமுறையாக (Accountig Practice) பின்பற்றப்பட்டுள்ளது. | |
| (இ) | 2024 சனவரி 01 திகதி முதல் பெப்ரவரி 28 திகதி வரையான காலப் பகுதியில் சனிதா வாசனா, லக்ன வாசனா, ஜயோதா, சுப்பர்போல், அதகோடிபதி, சுப்பிரி தன சம்பத ஆகிய 06 லொத்தர் வகைகளிற்காக இரண்டாவது வரம் எனும் பெயரில் வழங்கப்பட்ட விசேட பரிசிற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசு செலவுகளின் கூட்டுத் தொகை ரூபா 64,100,000 தொகையை ஆண்டின் பரிசு செலவாக கணக்கீடு செய்யாது பரிசு ஒதுக்க நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பீட்டு எண்ணக்கருவிற்கு மாற்றமாக பரிசுச் செலவு இனங்காணப்பட்டதால் மீளாய்வாண்டில் இலாபம் ரூபா 64,100,000 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 1997 இன் 20 இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 18 (3) பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி லொத்தர் தொகை ஏதேனும் ஒரு நபரினால் வெல்லப்படாத சந்தர்ப்பத்தில் அந்த பரிசுத் தொகை ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன், அந்த கணக்கில் ஒன்றுசேரும் காசு அளவு பின்னர் நடைபெறும் அபிவிருத்தி லொத்தர்களின் பரிசு வழங்குவதற்காக பயன்படுத்தப்படவேண்டுமென குறிப்பிடப்படுகின்றது. அதன் பிரகாரம் சட்டத்தில் மேற்குறிப்பிட்ட பிரிவிற்கு இணங்கும் வகையில், 2024 ஆண்டில் பரிசு ஒதுக்கு கணக்கில் திரண்டிருந்த நிதியத்தில் இருந்து ரூபா 64,100,000 தொகை மீண்டும் மேலதிக பரிசு வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சபை, அபிவிருத்தி லொத்தர சபை சட்ட பிரகாரம் பரிசு ஒதுக்கு கணக்கை பயன்படுத்தி மேலதிக பரிசு வழங்கியுள்ளதுடன் பரிசு ஒதுக்கு கணக்கில் திரண்டிருந்த நிதிய அளவிற்காக இதற்கு முன்னைய ஆண்டுகளில் வருமானக் கூற்றுகளின் ஊடாக செம்மையாக்கல் செய்துள்ளதால் மீண்டுமொரு முறை நடைமுறை ஆண்டில் செலவாக காண்பிக்க முடியாது.<br>இதன் பிரகாரம் கணக்கீட்டு ஒப்பீட்டு எண்ணக்கரு வேண்டுமென்றே புறக்கணிப் செய்யப்படவில்லை என்பதுடன் அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்குவதற்காக மேலே கணக்கீட்டு முறைமை நீண்ட காலமாக கணக்கீட்டு நடைமுறை ஒன்றாக (Accounting Practice) பின்பற்றப்பட்டுள்ளது. | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கரு மற்றும் நியமங்களிற்கு இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அட்டுறு எண்ணக்கருவின் பிரகாரம் அட்டுறு செலவை இனங்காணும் போது தற்போதைய கடப்பாடு காணப்பட வேண்டியமை மற்றும் அந்த செலவை தீர்க்கும் போது வள வெளிபாய்சல் இயலுமை காணப்படலும் அதன் பெறுமதியை நம்பகரமாக அளக்க முடியுமாக இருத்தல் எனும் விடயங்களை நிறைவு செய்ய வேண்டும். 2021 ஆண்டு முதல் அட்டுறு செலவை இனங்காணும் முறைமையில் காணப்படும் பலவீனம் காரணமாக அட்டுறு எண்ணக்கருவிற்கு மாற்றமாக ஒரு சில அட்டுறு செலவுகள் இனங்காணப்பட்டு இருந்ததுடன் செலவை இனங்கண்ட ஆண்டின் பின்னைய ஆண்டில் செலவு ஏற்படாததால் அது வருமானமாக இனங்காணப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் 2023 அண்டில் அட்டுறு செலவாக இனங்கண்டிருந்த போதும் அச் செலவு மேற்கொள்ளப்படாததால்ரூபா 12,848,010 தொகை மீண்டும் மீளாய்வாண்டில் இலாபத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. | இந்த கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காட்டியுள்ளவாறு முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அட்டுறு செலவுகளிற்கு அடிப்படையான மதிப்பீடுகளில் (Estimate) ஏற்பட்ட மாற்றங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட சீராக்கமாகும். அதனால் LKAS - 8 நியமம் உரித்தாக்கப்பட்டுள்ளது. இந்த கணக்கீடு நியமம் (LKAS - 8) ஊடாக சுட்டிக் காட்டியுள்ளவாறு முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட மதிப்பீகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அட்டுறு செலவுகளின் சீராகம் நடைமுறை ஆண்டிற்கு உரித்தாக்கிக் கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (Prospective recognition) | நிதியாண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 10(ஆ) பிரிவின் பிரகாரம் எதிர்கால மதிப்பீட்டு ஆண்டொன்றில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் செலவு அல்லது நட்டத்திற்காக ஒதுக்கம் ஒன்றிற்கு அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ள நிதி அளவுகள் வரிக்குட்படும் வருமானத்தை கணிப்பிடும் போது குறைப்பதற்காக இடமளிக்கப்படாததால் விரிவான வருமானக் கூற்றில் செலவாக வரவு வைக்கப்பட்டுள்ள அவ்வாறான ஏற்பாடுகள் வரிக்குட்படும் வருமானத்தை கணிப்பிடும் போது மீண்டும் இலாபத்திற்கு சேர்க்க வேண்டும். 2024 திசெம்பர் 31 திகதியிற்கு ஊழியர் பணிக்கொடை பொறுப்பை மீண்டும் கணிப்பிடும் போது பற்றாக்குறை ஏற்பாடென விரிவான வருமானக் கூற்றிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 4,570,469 ஆன பணிப்கொடை ஏற்பாடடிற்காக 2003 ஆண்டில் வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றை பெற்றுக் கொள்வதற்காக செலுத்தியிருந்த ரூபா 723,780 ஆன மீள்செலுத்தும் வைப்புத் | வருடாந்த வருமான வரியை கணிப்பிடல், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 12 இன் பிரகாரம் அதற்காக மதிப்பீடொன்றின் அடிப்படையில் ஒதுக்கீடு மாத்திரம் செய்யப்படுகின்றது. இது நீண்ட செயற்பாடொன்றாவதால் வருடாந்த வருமான வரியை திட்டவட்டமாக கணிப்பிட்டு செலுவத்துவதற்காக அடுத்த நிதியாண்டின் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை காலமொன்று உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம் எம்மால் 2025 செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரியவாறு 2024 ஆண்டிற்காக உள்ளவாறான வருமான வரியை கணிப்பிட்டு குறித்த சரியான வரி செலுத்தப்படும். | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் வரிக்குட்பட்ட வருமானத்தை சரியாக கணிப்பிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையை மீள்பெற்றுக் கொள்ளல் நிச்சயமற்றதால் 2024 ஆண்டில் நிச்சமற்ற பெறுவனவிற்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா 723,780 தொகை வரிக்குட்பட்ட வருமானத்தை கணிப்பிடும் போது மீண்டும் இலாபத்திற்கு சேர்த்திருக்காததால் மீளாய்வாண்டில் வருமான வரி ரூபா 1,159,274 குறைவாக கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 16 (4) பிரிவின் மற்றும் 02 ஆம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் முழுமையாக மூலதன படிகளை பெற்றுக் கொண்ட சொத்துக்களை வெளியேற்றும் போது ஏற்படும் நட்டம் வரிக்குட்பட்ட இலாபம் கணிப்பிடும் போது இடமளிக்கப்படாத செலவொன்றாவதால் மீண்டும் கணக்கிட்டு இலாபத்திற்கு சேர்க்க வேண்டும். மீளாய்வாண்டளவில் சபையினால் முழுமையாக மூலதன படிகளை பெற்றுக் கொண்ட கிரயம் ரூபா 502,595 ஆன அலுவலக உபகரணங்கள், கிரயம் ரூபா 289,791 ஆன தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் கிரயம் ரூபா 12,570 ஆன கணனிகளை மீளாய்வாண்டில் வெளியேற்றியதால் ஏற்பட்ட கூட்டுத் தொகை ரூபா 467,974 ஆன நட்டத்தை மீளாய்வாண்டின் செலவாக கணக்கீட்டு இலாபத்திலிருந்து குறைத்திருந்த போதும் வரிக்குட்பட்ட வருமானத்தை கணக்கிடும் போது அந்த நட்டம் மீண்டும் வருமானத்திற்கு சேர்க்கப்படாததால் மீளாய்வாண்டில் வருமான வரி ரூபா 140,392 இனால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது. | வருடாந்த வருமான வரியை கணிப்பிடல், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 12 இன் பிரகாரம் அதற்காக மதிப்பீடொன்றின் அடிப்படையில் ஒதுக்கீடு மாத்திரம் செய்யப்படுகின்றது.<br><br>சொத்துக்களை வெளியேற்றுவது தொடர்பாக கணக்கீட்டு இலாபம் நிதிக்கூற்றிற்காக கணக்கீட்டு அடிப்படையில் தயாரித்திருந்த போதும் வருமான வரி அடிப்படையில் குறித்த வரி பிரமாணங்கள் மீது சொத்துக்களை வெளியேற்றும் இலாபத்தை கணக்கிடுவதற்காக சிறிது காலம் செல்வதால் கணக்கீட்டு தேவைகளிற்காக 2024 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் அடிப்படை வரி கணிப்பீட்டினை கவனத்திற் கொண்டு இந்த வரி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உள்ளவாறான வருமான வரி கணிப்பீட்டின் போது குறித்த அனைத்து தொழிநட்ப விடயங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டு விரிந்த வரி கணிப்பீடொன்றை மேற்கொண்டு உரிய திகதியில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடப்படும் வருமானத்தை சரியாக கணிப்பிட வேண்டும். |
| (எ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 16 (2) பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் மூலதன படிகளை கணக்கிட்டு வரிகுட்பட்ட வருமானத்தை கணிப்பிடும் போது குறைக்க வேண்டிய போது சபையினால் வரிக்குட்பட்ட வருமானத்தை கணிப்பிடும் போது மூலதன படிகளை சரியாக கணிப்பிட்டு இருக்காததுடன் மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு செலவான ரூபா 109,667,357 இலிருந்து 60 சதவீதமான ரூபா 65,800,414 மூலதன படிகளாக குறைக்கப்பட்டிருந்தது. | வருடாந்த வருமான வரியை கணிப்பிடல் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 12 இன் பிரகாரம் அதற்காக மதிப்பீடொன்றின் அடிப்படையில் ஒதுக்கீடு மாத்திரம் செய்யப்படுகின்றது.<br><br>நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் மூலதன படிகளை கணிப்பிடுவதற்கான காலம் இல்லாததால் மூலதன படிகள், வருடாந்த பெறுமானத் தேய்வை | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் வரிக்காக இடமளிக்கப்படும் சதவீதத்தின் கீழ் மூலதன படிகள் கணிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடொன்றாக பயன்படுத்தப்பட்டுள்ளது.<br><br>வருடாந்த வருமான வரியை திட்டவட்டமாக கணிப்பிட்டு செலுத்துவதற்காக எதிர்வரும் நிதி ஆண்டின் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலத்தை உள்நாட்டு இறைவரி திணைக்களம் வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் எம்மால் 2025 செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரியவாறு 2024 ஆண்டிற்காக உள்ளவாறான வருமான வரி கணிப்பிடப்பட்டு குறித்த சரியான வரி கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கை**

| | விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லாத சொத்துக்களிற்குரிய 06 பேரேட்டு கணக்குகளில் 2024 ஆண்டின் பெறுமானத் தேய்வுச் செலவாக ரூபா 34,116,012 தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த சொத்துக் கணக்குகளிற்குரியதாக கணக்காய்விற்கு வழங்கியிருந்த நிலையான சொத்து அட்டவணை பிரகாரம் செலவு ரூபா 33,367,046 ஆனது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வு செலவு ரூபா 748,966 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2024 ஆண்டினுள் பராதீனம் செய்யப்பட்ட சொத்து, அட்டவணையில் காண்பிக்கப்படாததால் அதற்குரிய பெருமானத் தேய்வும் அந்த ஆவணத்தின் மூலம் காண்பிக்கப்படவில்லை.<br><br>அதனால் அலுவலக உபகரணங்கள், தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் கணனியும் உதிரிப்பாகங்களும் எனும் வகைகளின் பேரேட்டு கணக்கு பிரகாரம் பெறுமானத் தேய்வு மற்றும் சொத்து அட்டவணை பிரகாரம் பெறுமானத் தேய்வை ஒப்பிட முடியாதென தயவுடன் அறிவிக்கிறேன்.<br><br>எவ்வாறாயினும், கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் கணனி பென்பொருள் வகையில் ரூபா 299,797 பெறுமானத் தேய்வு ஒதுக்கம் தொடர்பாக உடன்படுவதுடன் அந்த வித்தியாசம் இவ்வாண்டினுள் சரி செய்யப்படும். | அட்டவணையுடன் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்து பெறுமானத் தேய்வு இணக்கஞ் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட ஐக்கிய பத்திரிகை கம்பனி எனும் இரண்டு நிறுவனங்களிற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிய சபையின் நிதிக்கூற்றின் பிரகாரம் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 62,960,000 மற்றும் ரூபா 3,875,113 ஆன போதும் இரண்டு | இந்த கணக்காய்வு ஐயவினா தொடர்பாக சுட்டிக் காட்டியுள்ள முறனை இனங்காண்பதற்கான உரிய விபரங்களை வழங்குமாறு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட ஐக்கிய பத்திரிகை கம்பனி ஆகிய நிறுவனங்களிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி அந்த மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களினாலும் நேரடியாக கணக்காய்விற்கு உறுதி செய்த மீதிகள் முறையே ரூபா 77,079,512 மற்றும் ரூபா 6,343,788 ஆனதில் மீதிகளிற்கிடையே வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அதனால் அந்த விபரம் கிடைத்த பின்னர் எம்மால் மீதி இணக்ப்பாட்டை மேற்கொண்டு இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை முன்வைக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி அந்த மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் வொக்ஷோல் வீதியில் 234 இலக்கம் கொண்ட கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள 2006 ஆண்டில் அணுகியிருந்த உடன்படிக்கை பிரகாரம் செலுத்தியிருந்த ரூபா 5,700,000 ஆன வைப்பிற்கு 18 வருடங்கள் கடந்துள்ள போதும் அறவீடு செய்வதற்காக சபைக்கு இயலாமல் இருந்தது. | வொக்ஷோல் வீதி 234 ஆம் இலக்க கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் தொடர்பாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 5,700,000 ஆன தொகையினை அறவிடுவது தொடர்பாக நிதியமைச்சின் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அறிக்கை ஒன்று பெறப்பட்டுள்ளதுடன் அந்தஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையை செயற்படுத்துவதற்கு தேவையான எதிர்வரும்சட்ட அலுவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்குரிய அனைத்து தகவல்களும் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த தகவல்கள் கிடைத்ததாக சட்டமா அதிபர் திணைக்களம் உறுதி செய்துள்ளது. எனினும் இது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கிடைக்காததால் 2023/07/24 மற்றும் 2025/02/21 திகதியுடைதாக மீண்டும் கடிதம் அனுப்பி சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து இது தொடர்பாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றம் வினவப்பட்டுள்ளது. | பெற வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடடிவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வோர்ட் பிரதேசத்தில் கட்டிடமொன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக 1990 ஆண்டில் நபர் ஒருவருடன் செய்து கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வைப்பு செய்யப்பட்ட ரூபா 2,520,000 ஆன கட்டிட வாடகை வைப்புத் தொகையை அறவீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு | சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2025.02.24 ஆம் திகதிய கடிதமொன்றை அனுப்பி இந்த நீதிமன்ற நடவடிக்கை தொடர்பான முன்னேற்றத்தை வினவுவதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டது. அங்கு இச்சட்ட நடவடிக்கைக்கு பொறுப்பாக கடமையாற்றும் வழக்கறிஞர் குறிப்பிட்டதாவது இந்த அறவீட்டு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் | இத் தொகையினை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| தீர்க்கப்பட்டு 09 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அத் தொகையை அறவீடு செய்வதற்கு சபை தேவையான செயற்பாடுகளை எடுத்திடிருக்கவில்லை. | இருப்பதால் 2025 ஆண்டு முடிவடைய முன்னர் இந்த தொகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதென. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சட்டங்கள் விதிகள்,**

| | பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1997 இன் 20 இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 19 பிரிவு | சீட்டுப் பத்திரத்தில் குறிப்பிட வேண்டிய விபரம்,உப விற்பனை முகவரிற்று செலுத்த வேண்டிய பணிக்கொடை, சீட்டுப் பத்திரத்தின் வெற்றி இலக்கம் மற்றும் வெற்றியாளர்களை பகிரங்கப்படுத்தல் மற்றும் தேவையான ஏனைய விடயங்கள் தொடர்பான விதிகளை தயாரிக்க வேண்டிய போதும் 2024 ஆண்டு இறுதி வரையும் சட்டம் பிரகாரம் விதிகளை தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1997 இன் 20 இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 19 பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விதிகள் 2022.09.28 திகதி நடைபெற்ற 295 ஆம் பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அங்கு பணிப்பாளர் சபையினால் இதற்காக துறைசார்ந்த அறிஞர் குழுவிற்கு சமர்ப்பித்து முன்நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் கொழும்பு பல்கலைக்கழக கணனி ஆய்வு பிரிவிற்கு அனுப்பி பரிந்துரை பெற்றுக் கொண்ட பின்னர் மீண்டும் 296 ஆம் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.<br>அங்கு பணிப்பாளர் சபையினால் நிதி அமைச்சின் சட்ட நடவடிக்கை பிரிவின் உறுப்பினர் ஒருவர் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி ஆய்வு பிரிவின் உறுப்பினர் ஒருவருடன் அமைந்த குழுவொன்றின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து முன் அறிவுரை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>எனினும் இக்குழுவிற்கு உறுப்பினர்களை பெயரிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்காக வழங்கப்பட்ட பதில் நீதி அமைச்சின் சட்டப் | அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரிவிலிருந்து கிடைக்காத காரணத்தால் தயாரிக்கப்பட்டுள்ள நகழ் அறிக்கை சட்ட அறிவுரை பெற்றுக் கொள்வதற்காக 2024.09.03 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | i.அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இலக்கம் 01/2024 கொண்ட சுற்றறிக்கையின் 14.1 பிரிவு | 2024 ஜுன் 19 திகதி முதல் ஜுலை 24 திகதி வரையான காலத்தினுள் தீவின் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் தரம் 1 முதல் தரம் 11 வரை கற்கும் தெரிவு செய்யப்பட்ட 100,000 மாணவர்களிற்கு மற்றும் க.பொது.த (உயர் தரம்) கற்கும் தெரிவு செய்யப்பட்ட 6000 மாணவர்களிற்கு சனாதிபதி நிதியம் நடாத்தியிருந்த புலமைபரிசில் நிகழ்சித் திட்டத்தின் விழா நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த சபையினால் கூட்டுத் தொகை ரூபா 73,266,631 செலவிடப்பட்டிருந்தது. | அதன் போதைய சனாதிபதி அவர்களின் அறிவுரையின் மீது சனாதிபதி செயலாளரினால் எமக்கு ஒப்படைக்கப்பட்ட இந்த பணி பணிப்பாளர் சபையின் முன்கூட்டிய அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. | அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரகாரம் மற்றும் குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய செயற்பாட்டு விதிக் கோவையின் 3.2 (v) பந்தி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்பு செலுத்தும் நடைமுறையொன்று இல்லாது மீளாய்வாண்டில் ரூபா 121,772,415 தொகை ஊக்குவிப்பாக ஆளணியினரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | சபையின் ஊக்குவிப்பு செலுத்தும் போது ஒழுங்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டு இருக்காததுடன் 2024 ஆம் ஆண்டில் இதற்காக முறைமையொன்றை தயாரித்து பணிப்பாளர் சபைக்கு முன்வைத்து அங்கீகாத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் நீதி அமைச்சிடமும் குறித்த முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள தற்போது தேவையான தகவல்கள் நிதி அமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பொது நிதி முகாமைத்துவ சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் அங்கீகரிக்கப்படாத நடைமுறைகளிற்காக கொடுப்பனவு செய்யக் கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2020 ஒக்டோபர் 02 திகதிய இலக்கம் 05/2020 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | திருத்துதல் ஆக்கபூர்வமானதான ஓட்ட நிலையில் இல்லாத வாகனங்களை திருத்தி பயன்படுத்த வேண்டிய போதும் பதிவு இலக்கம் 301-1470 கொண்ட மோட்டார் வாகனத்தை திருத்தி பயன்படுத்தக் கூடிய இயலுமை காணப்பட்ட போது 2023 ஏப்ரல் 20 திகதி முதல் வளவில் திருத்தி வைக்கப்பட்டிருந்தது. | சபையின் தொகுதியில் காணப்படும் 301–1470 கொண்ட மோட்டார் வண்டியை இரண்டு சந்தர்ப்பங்களில் திருத்த விலைமனு கோரப்பட்டது. எனினும் அந்த பெற்றுக் கொண்ட விலைகளின் பிரகாரம் அந்த வண்டியின் சில பாகங்கள் தற்போது சந்தையில் இல்லாத காரணத்தால் இந்த வண்டியை திருத்துவது தாமதமானது. எவ்வாறாயினும் மீண்டும் மோட்டார் வண்டி பாகங்களை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்கிய பின்னரும் மீண்டும் விலைமனு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்த போதும் முன்னரை போன்றே சில பாகங்களிற்கான விலைகள் முன்வைக்கப்படவில்லை. அதனால் 20 ஆண்டுகளை விஞ்சிய காலமாக காணப்படும் இந்த மோட்டார் வண்டியை திருத்துவது பொருளாதார ரீதியாக பயனற்றதென அவதானிக்கப்படுவதால் இந்த மோட்டார் வண்டியை எதிர்காலத்தில் பராதீனம் செய்வதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்று முன்நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | சரியான ஆய்வொன்றினை மேற்கொண்டு குறித்த மோட்டார் வண்டியை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(உ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**

| | | | |
|---|---|---|---|
| i. நிதிப் பிரமாணம் 134(1) | உள்ளக கணக்காய்வு அலகு இயக்க மற்றும் செயற்பாடுகளிலிருந்து சுவந்திரமாக இருக்க வேண்டிய போதும் யாழ்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நடந்த சனாதிபதி புலமைப் பரிசில் நிகழ்சித் திட்டத்தின் விழா ஒழுங்குபடுத்தும் பொறுப்பு சபையின் உள்ளக கணக்காய்விற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | சபையின் களத்தில் மேற்கொள்ளும் அதிவிசேடமான கருத்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள சில சந்தர்ப்பங்களில் அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக உள்ளக கணக்காய்வின் சேவையை பெற்றுக் கொள்ள நேரிட்டது. அதன் காரணமாக யாழ்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நடந்த சனாதிபதி புலமை பரிசில் நிகழ்சித் திட்டத்திற்கு உள்ளக கணக்காய்வாளரின் | குறித்த நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சேவையை பெற்றுக் கொள்ள நேரிட்டது.

எவ்வாறாயினும் கணக்காய்வு சுட்டிக் காட்டுவதன் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் இவ்வாறான அதிவிசேட கருத்திட்டத்திற்கும் உதவி சேவையை பெற்றுக் கொள்ளாதிருக்க தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,197,090,255ஆன இலாபமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 3,516,296,477 தொகையாக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 680,793,778ஆன முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு லொத்தர் சீட்டு விற்பனை வருமானம் ரூபா 28,880,477,301 வரை 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை மற்றும் சீட்டுப் பத்திர அச்சிடல் செலவு ரூபா 1,147,660,028 இலிருந்து ரூபா 832,983,406 வரை 27 சதவீதத்தால் குறைவடைந்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது லொத்தர் சீட்டு விற்பனை வருமானம் ரூபா 3,438,345,588 இனால் அதாவது 14 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் சபையின் செயற்பாடுகள், இலாபகரத்தன்மை மற்றும் திரவத் தன்மையை காட்டும் விகிதாசாரம் தொடர்பான விளக்கமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது

| | ஆண்டு 2023 | 2024 |
|---|---|---|
| **இலாபகரத்தன்மை விகிதாசாரம்** | | |
| மொத்த இலாப விகிதாசாரம் (சதவீதம்) | 39 | 40 |
| தேறிய இலாப விகிதாசாரம் (சதவீதம்) | 14 | 14 |
| **திரவத் தன்மை விகிதாசாரம்** | | |
| நடைமுறை விகிதாசாரம் (தடவைகள்) | 1:1.19 | 1:1.03 |
| **செயற்பாட்டு விகிதாசாரம்** | | |
| லொத்தர் வருமானத்தின் சதவீதமாக பரிசு செலுத்தல் | 53 | 54 |
| லொத்தர் வருமானத்தின் சதவீதமாக சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தல் | 14 | 14 |
| லொத்தர் வருமானத்தின் சதவீதமாக முகவர் தரகு | 21 | 21 |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுபிரி தன சம்பத் லொத்தரின் சீட்டுக் குழுக்கல் செயன்முறைக்காக சீட்டுக்குழுக்கும் மென்பொருள் ஒன்றை உருவாக்கியிதிருந்ததுடன் அந்த மென்பொருளின் செயற்பாட்டை பரீட்சிப்பதற்காக தொகுதிக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றிற்கு ரூபா 1,160,613 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக சீட்டுக் குழுக்கல் இயந்திரமொன்றின் மூலம் பந்துகளை கலந்து இதிலிருந்து எழுமாறாக பந்தொன்றை தெரிவு செய்யும் விதத்தில் ஒளிபரப்புவதற்காக ஒளிப்பதிவு நேரலை மென்பொருள் ஒன்றை (Game Animation Software) உருவாக்கிக் கொள்ள ரூபா 3,350,000 தொகை தனியார் மென்பொருள் உருவாக்கல் நிறுவனமொன்றிற்கும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்குறித்த மென்பொருளை சீட்டுக்குழுக்கல் செயன்முறையிலிருந்து அகற்றி மீளாய்வாண்டினுள் சீட்டுக்குழுக்கல் இயந்திரமொன்றை கொள்வனவு செய்து சீட்டுக்குழுக்கும் நடவடிக்கைக்காக ஈடுபடுத்திய காரணத்தால் உருவாக்கப்பட்ட இந்த மென்பொருள் விளைவற்று காணப்பட்டது. | கணக்காய்வின் மூலம் இந்த கணக்காய்வு பந்தியில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் Game Animation மென்பொருளை சீட்டுக் குழுக்கல் புதிய இயந்திரம் கிடைத்தவுடன் சீட்டுக் குழுக்கல் செயன்முறையிலிருந்து அகற்றப்படாததுடன் அதனை Backup வசதியாக வைத்துக் கொண்டு சீட்டுக் குழுக்கல் செயன்முறையின் தொடர்ச்சியான செயற்படலை உறுதி செய்து தினந்தோறும் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>இந்த பந்திக்குரியதாக கணக்காய்வினால் குறிப்பிட்டுள்ளவாறு ரூபா 4,510,613.00 தொகை சபைக்கு இழக்கப்படவில்லை. இந்த தொகையை சபையின் சுபிரி தன சம்பத லொத்தர் சீட்டின் சீட்டுக் குழுக்கல் செயன்முறையை தினந்தோறும் மேற்கொள்வதற்காக செய்துள்ள முதலீடொன்றாகும். அதன் மூலம் புதிய சீட்டுக் குழுக்கும் இயந்திரத்திற்காக Backup இயந்திரமொன்று கொள்வனவு செய்ய செலவிடவிருந்த பாரிய தொகை சபைக்கு சேமிக்க காரணமானதாக மேலும் அறிவித்துக் கொள்கிறோம். | புதிய லொத்தர் சீட்டொன்றை அறிமுகம் செய்கையில் அங்கு சீட்டுக் குழுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளையும் ஸ்தாபிக்க வேண்டும். |
| (ஆ) | சபை அன்றாடம் கொடுக்கல் வாங்களிற்காக பயன்படுத்தும் மக்கள் வங்கியின் யூனியன் பிரதேச கிளையில் பேணிச் செல்லும் இலக்கம் 014200190000651 கொண்ட Interest Sweep Account எனும் சேமிப்புக் கணக்கில் ரூபா 565,797,125 அளவான மாதாந்த சராசரி மீதியொன்றை பேணிச் சென்றிருந்ததுடன் 2.2 சதவீத வருடாந்த வட்டி விகிதத்தின் மீது 2024 ஆம் ஆண்டில் ரூபா 17,966,768 ஆன வட்டி வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. மேலதிக தொகையை பொருத்தமானவாறு முதலீடு செய்ய இயலாது சேமிப்புக் கணக்கில் நிறுத்தி வைத்த காரணத்தால் 8 சதவீத வட்டியின் மீது நிலையான வைப்புக்களில் முதலீடு | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் வங்கி மீதி மேலே குறிப்பிட்டவாறு சபையின் குருங்கால திரவத்தன்மை தேவைக்காக வைத்துச் செல்வதுடன் நிதி செயற்பாட்டில் காணப்பட வேண்டிய நம்பகத்தன்மையை கருத்திற் கொண்டு அந்த மீதியை நீண்ட கால முதலீட்டில்ஈடுபடுத்த முடியாதென அறிவிக்கிறேன்.<br><br>மேலும், கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடுவதன் பிரகாரம் 07 நாள் குருங்கான வைப்பில் (7 Day Call Deposit) பணம் வைப்பிலிட்டால் RTGS ஊடாக இலங்கை வங்கியில் பேணிச் செல்லும் ஏனைய | இரண்டு சேமிப்புக் கணக்குகளில் மாதாந்தம் கவனிக்கத் தக்க காசு மீதி காணப்படுவதால் சபை நன்மை தரும்வகையில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்திருந்தால் பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த ரூபா 55,864,543 ஆன வட்டி வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | கணக்குகளிற்கு பணத்தை செலவு வைக்க இயலாத நிலைமையும் ஏற்படும். அதனூடாக சபையின் அன்றாட இயக்க செயற்பாட்டில் பிரச்சினை ஏற்பட முடியுமென அறிக்கையிடுகிறேன். | |

**3.2 செயற்பாட்டு திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 நவம்பர் 09 திகதி சந்தைக்கு அறிமுகம் செய்திருந்த சுபிரி தன சம்பத் லொத்தர் வார நாளொன்றில் விற்பனை 245,000 லொத்தர் சீட்டுக்கள் மற்றும் ஞாயிறு நாளொன்ரின் விற்பனை 220,000 லொத்தர் சீட்டுக்கள் வரை அதிகரிக்க 2024 ஆண்டில் ரூபா 14,002,480 செலவில் மூன்று விற்பனை மேம்படுத்தல் நிகழ்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட போதும் வார நாளொன்றின் சராசரி விற்பனை லொத்தர் சீட்டு 164,419 மற்றும் ஞாயிறு நாளொன்றில் சராசரி விற்பனை லொத்தர் சீட்டு 133,051 மாத்திரம் ஆனதில் மேற்குறித்த விற்பனை மேம்படுத்தல் மூலோபாயம் வெற்றி அளித்திருக்கவில்லை. | அதிக போட்டி காரணமாக இந்த புதிய லொத்தர் சந்தையினுள் நிலைநிறுத்துவதற்காக பல மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிட்டது. எவ்வாறாயினும் தற்போது இந்த மேம்படுத்தல் நடவடிக்கையை நிறுத்தியுள்ளதுடன் பரிசு விகிதத்தையும் குறைத்து இலாப தன்மையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2025 ஏப்ரல் மாதம் அளவில் விற்பனையில் வளர்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளதுடன் அது சராசரியாக வார நாளில் 177,077 மற்றும் ஞாயறு தினத்தில் 146,171 உம் ஆகும். | சரியான எதிர்வு கூறலுடன் லொத்தர் விற்பனையை அதிகரித்துக் கொள்ளும் வகையில் விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த பொறுப்பேற்க வேண்டும். |
| (ஆ) | தொழிநுட்பத்தில் நிகழ்ந்து வரும் நவீனமயமாக்களுடன் எதிர்காலத்தில் அனைத்து வியாபார நடவடிக்கைகளும் பௌதீக சந்தையிலிருந்து விலகி நிகழ்நிலை முறைக்கு மாற்றமடையும் சாத்தியப்பாடு காணப்படும் பின்னியில் சபையினால் ஆண்டினுள் விற்பனை செய்திருந்த 745,645,051 லொத்தர் சீட்டுக்களில் 1,119,059 சீட்டுக்கள் மாத்திரம் (0.15%) நிகழ்நிலை முறை பயன்பாட்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | இந்த உள்ளீட்டை அறிமுகம் செய்கையில் மக்கள் வங்கியினால் விதிக்கப்பட்ட விதிகளின் பிரகாரம் இதனை செயற்படுத்தியதுடன் அதன் காரணமாக பாவணையாளர்களிற்கு இதனை அறிமுகம் செய்வதை போன்றே பயன்படுத்துவதும் கடினமாக செயலானது. அதன் காரணமாக 2024 ஆண்டில் இலத்திரனியல் லொத்தர் சீட்டு விற்பனை 1,118,871 அளவொன்றானது.<br><br>ஏவ்வாறாயினும் 2024 இல் அங்கீகரித்துக் கொண்ட பாதீட்டின் மூலம் நாம் எதிர்பார்த்த இலத்திரனியல் விற்பளை இலக்கு 1,201,241 ஆகும். அதன் பிரகாரம் எமது எதிர்பார்த்த இலக்கு 93.14% இனை நிறைவு செய்துள்ளது. | தொழிநுட்பத்தில் நிகழும் நவீன மயமாக்கலுடன் நிகழ் நிலை முறையில் லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வது தொடர்பில் கவனத்தை அதிகரிக்க வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆகஸ்ட் 01 திகதி முதல் 2025 ஜுலை 31 வரையான காலப் பகுதிக்காகசபையின் 07 வகை லொத்தர் சீட்டுக்களை வடிவமைத்தல், அபிவிருத்தி, அச்சீடு, மற்றும் வழங்கலிற்கான பெறுகையின் போது ஜயோதா மற்றும் சுபர் போல் எனும்லொத்தர்களிற்கான குறைந்த பட்ச விலை சமர்ப்பித்திருந்த விலைமனுவை, விலைமனு ஆவணத்தில் 2.C பந்தியில் குறிப்பிடப்படும் மனுதாரர்களினால்பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாய தேவைப்பாடுகளைபூர்த்தி செய்யவல்லையென தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்து ஆரம்ப விலைமனு மதிப்பீட்டின் போது அகற்றியிருந்தது. எனினும் விலைமனு ஆவணத்தின் 2.C பந்தியில் குறிப்பிடப்படும் மனுதாரர்களினால் நிறைவு செய்ய வேண்டிய கட்டாய தேவைப்பாட்டை நிறைவு செய்திருக்காத இரண்டாவது விலை சமர்ப்பித்திருந்த மனுதாரரிற்கு அந்த இரண்டு லொத்தர் வகைகளும் உள்ளடங்களாக மூன்று லொத்தர் வகைகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை வழங்கியிருப்பதன் காரணமாக உத்தேச மற்றும் சுபர் போல் எனும் இரண்டு லொத்தர் சீட்டு அச்சிடலின் போது ரூபா 8,140,000 ஆன நட்டமொன்று ஏட்பட்டிறிருந்தது. | Printcare Secure Ltd நிறுவனத்தின் மனு விலைகள் தள்ளுபடி செய்யப்பட்டதானது அந்த நிறுவனத்தினால் முன்வைத்துள்ள தகவல்தொழிநுட்ப பிரிவின் ஆளணியினர் லொத்தர் அச்சீட்டிற்காக சேவை வழங்க ஈடுபடுத்தியுள்ள அதே நிறுவனத்தின் நிரந்தர தகவல் தொழிநுட்ப அலுவலர்கள் என உறுதி செய்யப்படாமை மற்றும் Printcare Secure Ltd நிறுவனம் பெயரிட்டுள்ள அலுவலர்கள் லொத்தர்வழங்குவதற்கான தகவல் தொழிநுட்ப கடமைக்காக தொடர்புபடாத வேறு நபர்கள் என்பதை போலேவே Printcare Secure Ltd நிறுவனத்தின் லொத்தர் அச்சீட்டிற்குரிய தகவல் தொழிநுட்ப கடமை நடவடிக்கைகள்மூன்றாம் தரப்பு நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொள்வதாக உறுதியானதன் மீது மாத்திரமே ஆகும். | விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் மனுதாரர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | விலைமனு ஆவணத்தின் 06 ஆம் பந்தி பிரகாரம் கடந்தமூன்று ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் வழங்கப்பட வேண்டிய போதும் இரண்டு ஆண்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது மற்றும் விலைமனு ஆவணத்தின் 16iii பந்தி பிரகாரம் மனுதாரரினால் கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொண்ட சமமான வழங்கல் தொடர்பான தகவல் மற்றும் அவற்றை உறுதி செய்யும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு தகவல்கள் வழங்கப்படாத போதும்,அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாது தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிற்கு லக்ன வாசனா மற்றும் கப்ருக லொத்தர் வகை இரண்டிற்காக ரூபா 234,460,000 | விலைமனு ஆவணத்தின் கட்டாய நிபந்தனை 2.a மாற்றுத் தரவு அச்சிடலில் (Variable data printing) 03 ஆண்டுகால அனுபவம் காணப்பட வேண்டியதுடன் குறித்த வழங்குனர் இந்த நிறுவனத்தில் 2015/2016 ஆண்டுகளில் லொத்தர் சீட்டு அச்சிட்ட வழங்குனர் ஒருவர் மற்றும் 2017 ஆண்டுகளில் தேசிய லொத்தர் சபைக்கு சீட்டுக்களை வழங்கிய மற்றும் 2024.04.04 திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் 8.1.2. இன் கீழ் தொழிற்சாலை பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் வங்கி மற்றும் காப்புறுதி நிறுவனங்களில் Variable data அச்சிட்டுக் கொண்டு இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் Toppan Forms (Colombo) Ltd | பெறுகை வழகாட்டிக் கோவையின் பிரகாரம் வெற்றிகரமான மனுதாரரை தெரிவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிக்கு அச்சிடல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | நிறுவனம் மாற்றுத் தரவு அச்சிடல்தொடர்பான அனுபவ இயலுமை காணப்படுவதாக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் திட்டவட்டமாக உறுதி செய்துகொண்டுள்ளது. | |
| (இ) | அபிவிருத்தி லொத்தர் சபையில் இடம்பெறும் லொத்தர் இயக்க மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டு வெளி சேவை வழங்கும் நிறுவனத்தினுள் இடம்பெறுவதனால் அந்த மொத்த செற்பாட்டையும் சபையின் ஆளணினர் ஊடாக மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் தொகுதியொன்றை கொள்வனவு செய்ய 2019 ஆண்டில் தேசிய போட்டி விலைமனு முறையை பயன்படுத்தி விலைமனு கோரியிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரை 05 ஆண்டுகள் கடந்துள்ள போதும் விலைமனு மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத காரணத்தால் கடந்த 05 ஆண்டுகளிற்காகலொத்தர் முகாமைத்துவ மென்பொருள் தொகுதி சேவையை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 92,541,077 தொகை வெளி சேவை வழங்கும் நிறுவனமொன்றிற்கு செலுத்த நேரிட்டிருந்தது. | விசேடமாக 2022/2023ஆண்டுகளில் நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமை காரணமாக தகவல் தொழிநுட்ப பிரவின் ஊழியர்களின் விலை உயர்வடைந்தமை மற்றும அனுபவமிக்க ஊழியர்களை அரச துறைக்கு கவர்ந்து கொள்ளல் மற்றும் நிறுத்தி வைத்துக் கொள்ளவுள்ள அசௌகரியம் இனங்காணப்பட்டது.அவ்வாறான நிலைமையில் ஆரம்பமாக தகவல் தொழிநுட்ப பிரிவின் முழுநேர மனிதவள தேவைப்பாட்டை தீர்மானித்துஅதற்கான வெற்றிடங்களிற்கு புதிய ஊழியர்களை ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் பெறுகைகளிற்கு உரிய பணிகளை மேற்கொள்ள வேண்டுமென தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பெறுகை நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் உத்தேச LMS தொகுதிக்கான நிரந்தர ஆளணியினரை ஆட்சேர்ப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அந்த விடயம் தொடர்பாக 2024.01.12 திகதிய நிதி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம் இது தொடர்பாக 2024.07.26 திகதி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவ்வாறே தொகுதியை ஸ்தாபிப்பது தொடர்பாக மேற்கொண்ட முதலாவது விலைமனு கோரலின் போது குறித்த விடயப் பரப்பினுள் உள்ளடங்கியிருந்த பல உருப்படிகள் தற்போது திருத்தத்திற்கு உட்பட்டுள்ளதுடன் அந்த விடயங்களை இனங்கண்டு விலைமனு ஆவணத் தொகுதிக்கு உட்படுத்தியுள்ளதுடன்சபையின் ஆளணியிற்கு உத்தேச தொகுதி தொடர்பான பயிற்சி மற்றும் | குறித்த பெறுகைகள் நடவடிக்கையை விரைவில் பூர்த்தி செய்து லொத்தர் இயக்க மற்றும் முகாமைத்துவ செயன்முறையை ஸ்தாபிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தெளிவை பெற்றுக் கொள்ளும் வகையில் வழங்குனர் நிறுவனத்தின்இரண்டு பொறியியலாளர்கள் சபையின் ஆளணியினருடன் கடமையில் ஈடுபடுத்த வேண்டுமென விலைமனு நிபந்தனை உட்படுத்தப்பட்டுள்ளது. கட்டாய இரண்டு ஆண்டு தேவைப்பாட்டின் பிரகாரம் சேவைக் காலத்தை 05 ஆண்டுகள் வரை அந்த சேவையை பெற்றுக் கொள்ள பெறுகைகளிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம் தற்போது அப் பெறுகைகளிற்குரிய விலைமனு கோரப்பட்டுள்ளதுடன் விலைமனு திறத்தல் 2025.06.17 திகதி மேற்கொள்ளப்படவுள்ளது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தற்போது உலகத்தில் நடைமுறையிலுள்ள தொழில்நுட்ப ஆழம் மற்றும் லொத்தர் சந்தையில் காணப்படும் போட்டித் தன்மையை கவனத்தில் கொண்டு லொத்தர் விற்பனவை டிஜிடல் ஊடகத்தை பயன்படுத்தி மேற்கொள்வதற்காக டிஜிடல் உள்ளீடொன்று DLB Sweep என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு SMS ஊடாக E லொத்தர் விற்பனை செய்தல், விற்பனை மேன்பாடு உட்பட்ட கருமங்களுக்காக 2024 ஆண்டின் பாதீட்டின் மூலம் ரூபா 20,000,000 தொகையை பயன்படுத்த திட்டமிட்டுள்ள போதும் ரூபா 576,066 தொகையொன்று மாத்திரம பயன்படுத்தப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டுத் தொகையில் 3 சதவீதமாகக் காணப்பட்டது. | இந்த உள்ளீட்டை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவதற்காக ஆரம்பத்தில் மேம்பாட்டு நிகழ்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்ட போதும் இந்த உள்ளீட்டை காணப்பட்ட நடைமுறை தொழிநுட்ப பிரச்சினையை தீர்க்கும் வரை அந்த மேம்பாட்டு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. | E லொத்தர் சீட்டுக்களின் மேம்பாட்டு அலுவல்களை செயற்படுத்தி லொத்தர் சீட்டு விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |